# ஜனவரி – 22 – திங்கள்

### புனித வின்சன்ட்

### என் ஊழியன் தாவீதைக் கண்டுபிடித்தேன்:திபா. 89:20

---------------------------------------------------------------

## முதல் வாசகம் : 2 சாமுவேல் 5 : 1 – 7, 10

இஸ்ரயேலின் அனைத்துக் குலங்களும் எபிரோனுக்கு வந்து தாவீதிடம் கூறியது நாங்கள் உம் எலும்பும் சதையுமானவர்கள். சவுல் எங்கள் மீது ஆட்சி செய்த கடந்த காலத்திலும் கூட நீரே இஸ்ரயேலை நடத்திச் சென்றவர். நீயே என் மக்கள் இஸ்ரயேலின் ஆயனாக இருப்பாய் நீயே இஸ்ரயேலுக்கு தலைமைதாங்குவாய் என்று உமக்கே ஆண்டவர் கூறினார். இஸ்ரயேலின் பெரியோர்கள் எல்லாரும் அரசரைக் காண எபிரோனுக்கு வந்தனர். அரசர் தாவீது எபிரோனில் ஆண்டவர் திருமுன் அவர்களோடு உடன்படிக்கை செய்து கொண்டார். இஸ்ரயேலின் அரசராக அவர்கள் தாவீதை திருப்பொழிவு செய்தார்கள். முப்பது வயதில் அரசரான தாவீது, நாற்பது ஆண்டுகள் ஆட்சி புரிந்தார். எபிரோனில் தங்கி யூதாவை ஏழு ஆண்டுகள் ஆறு மாதங்களும், பிறகு எருசலேமில் தங்கி அனைத்து இஸ்ரயேல் யூதாவை முப்பத்து மூன்று ஆண்டுகளும் அவர் ஆட்சி புரிந்தார். அரசரும் அவருடைய ஆள்களும் அம்மண்ணின் மைந்தர் எபூசியருக்கு எதிராக எருசலேம் சென்ற போது, அவர்கள் தாவீதை நோக்கி, ”நீர் இங்கே வர முடியாது. பார்வையற்றவரும் முடவரும் கூட உம்மை அப்புறப்படுத்தி விடுவார்கள்” அதாவது ”இங்கே தாவீது வர முடியாது” என்றனர். இருப்பினும் தாவீது சீயோன் கோட்டையைக் கைப்பற்றினார். அதுவே தாவீதின் நகர். தாவீது தொடர்ந்து வளர்ச்சி பெற்றார். படைகளின் கடவுளாகிய ஆண்டவர் அவரோடு இருந்தார்.

**பதில்பாடல்:** என் வாக்குப் பிறயாமையும் பேரன்பும் அவரோடு இருக்கும்.

## நற்செய்தி : மாற்கு 3 : 22 - 30

அக்காலத்தில், எருசலேமிலிருந்து வந்திருந்த மறைநூல் அறிஞர், ”இவனைப் பெயல்செபூல் பிடித்திருக்கிறது” என்றும் ”பேய்களின் தலைவனைக் கொண்டே இவன் பேய்களை ஓட்டுகிறான்” என்றும் சொல்லிக் கொண்டிருந்தனர். ஆகவே அவர் அவர்களைத் தம்மிடம் வரவழைத்து அவர்களுக்கு உவமைகள் வாயிலாகக் கூறியது ”சாத்தான் சாத்தானை எப்படி ஓட்ட முடியும்? தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த அரசும் நிலைத்து நிற்க முடியாது. தனக்கு எதிராகத் தானே பிளவுபடும் எந்த வீடும் நிலைத்து நிற்க முடியாது. சாத்தான் தன்னையே எதிர்த்து நின்று பிளவுபட்டுப் போனால் அவன் நிலைத்து நிற்க முடியாது. அதுவே அவனது அழிவு. முதலில் வலியவரைக் கட்டினாலன்றி அவ்வலியவருடைய வீட்டுக்குள் நுழைந்து அவருடைய பொருள்களை எவராலும் கொள்ளையிட முடியாது. அவரைக் கட்டி வைத்த பிறகுதான் அவருடைய வீட்டைக் கொள்ளையிட முடியும். உறுதியாக உங்களுக்குச் சொல்கிறேன். தூய ஆவியைப் பழித்து உரைப்பவர் எவரும் எக்காலத்திலும் மன்னிப்புப்பெறார் அவர் என்றென்றும் தீராத பாவத்திற்கு ஆளாவார். ஆனால் மக்களுடைய மற்றப் பாவங்கள், அவர்கள் கூறும் பழிப்புரைகள் அனைத்தும் அவர்களுக்கு மன்னிக்கப்படும்.” ”இவனைத் தீய ஆவி பிடித்தி ருக்கிறது” என்று தம்மைப் பற்றி அவர்கள் சொல்லி வந்ததால் இயேசு இவ்வாறு கூறினார்.

**தியானம்:** இயேசு தீயவனின் தந்திரத்தையும் அதிகாரத்தையும் ஒழித்துக்கட்டவும் வேரோடு பிடிங்கி எறியவும் வந்தார். தந்தையாகிய கடவுள் தந்த வல்லமையைக் கொண்டே இயேசு அனைத்துக் காரியங்களையும் செய்தார். தூய ஆவியானவருக்கு எதிரான பாவம்'' தூய ஆவியானவரின் தூண்டுதல்களை அவமதிப்பதும் உதாசீனப்படுத்துவதும்'' தான் அன்றைய சதுசேயர்கள், பரிசேயர்கள், சட்ட வல்லுனர்கள் இயேசுவின் வழியாக தூய ஆவி காண்பித்த சான்று பகர்ந்த எந்த ஒன்றையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை. தூய ஆவியாரைக் குறித்து பேசுகின்ற போது ஆண்டவர் இயேசு'' உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார் ''என்பார் (யோவா16:13). ஆம் தூய ஆவியார்தான் நமக்கு எது உண்மை, எது பொய் என்பதைக் கற்றுத் தருபவராக இருக்கிறார். அவர் மட்டும் இல்லை என்றால் நம்மால் நன்மை தீமையை பிரித்து பார்க்க முடியாது. ஆகவே அப்படிப்பட்டதூய ஆவியானவரை யார் ஒருவர் மறுக்கின்றார்களோ அவர் உண்மையின் வழியில் நடக்க ஒருநாளும் வாய்ப்பில்லை.நாம் எப்போதும் தாய ஆவியின் தூண்டுதலுக்கு ஏற்ப அவர் காட்டும் உண்மையின் பாதையில் நடக்க வேண்டும் அப்போது தான் கிறிஸ்தவர்கள் என்று அழைக்கப்பட முடியும். ஆகவே தூய ஆவியின் பிரசன்னத்தை உணர்ந்தவர்களாய் அவர் காட்டும் உண்மையின் வழியில் நடப்போம் .அதன் வழியாக இறை அருள் நிறைவாகப் பெறுவோம்.